CIFF DAILY BUZZ

In Association With THE HINDU

Powered By தி இந்து

With the support of Government of Tamil Nadu

14TH Chennai International Film Festival

08th Jan 2017

The Romanian film Graduation, won its' director Cristian Mungin, the best director at Cannes 2016 film festival. Should we say more for you to kick-start Day 4 of the 14th edition of the Chennai International Film Festival? Graduation, set in a small Romanian town focuses on a doctor. According to the director, the film was inspired by where he was in life at the time of filmmaking and therefore focuses on parenting.

Another big highlight of the festival is the Brazilian drama, Between Valleys, a co-production by Germany and Uruguay. Premiering at the Festival do Rioin September 2012, the film was also screened at the Festlatino - "Latin American Film Festival of São Paulo" and at the Seattle International Film Festival. Tne story follows, Vicente an economist, father of Caio and married with Marina, a dedicated dentist. He leads an ordinary life both at home and work. However, a loss followed by another ultimately leads him to a life completely miserable. He changes his name and starts living in a garbage dump. Experience this riches-to-rags tale for yourself on the big screen.



One doesn't get to see a lot of Sankrit features and with that regard, don't miss out on Ishti. The first film in Sanskrit with a social theme, the feature has iconic actor Nedumudu Venu in the lead and talks about searching for self.

Another must-watch is A Creator With Midas Touch, a documentary on famed Indian writer, director, producer and lyricist Panchu Arunachalam.

## Change in Schedule

**Dearest** will be screened in place of **Innocent Sorcerers** @ INOX 2 | 8th Jan17 Sunday | 2.30 p.m.

**The Night Watchman** will be screened in place of **Devil's Bride** @ INOX 2 | 12th Jan17 Thursday | 10.15 a.m.

## Asian Film Awards Academy

Founded in 2013 by the three major international film festivals in Asia, that is Busan, Hong Kong and Tokyo, the Asian Film Awards Academy's objective is to promote and develop Asian cinema, its talents and audiences. The AFAA highlights, strengthens and develops the Asian film industry and culture through the Asian Film Awards, and year-round initiatives such as professional exchanges, mentorship and development programs for young filmmakers, and strategies for regional and international audience development.



Mr. Sam Ho, Ms. Jacqueline Tong of Asian Film Awards Academy with Mr. Thangaraj, Festival Director of 14th CIFF during Inauguration of 14th CIFF

The Asian Film Awards Academy members come from all over Asia. They are drawn from all nominees and winners at the Asian Film Awards. Additional members who are prominent in their field may also be inducted into the Asian Film Awards Academy. Members are given voting rights for the Asian Film Awards and also participate in various Academy activities around the region.

The Asian Film Awards Academy expresses the increasing global importance and creative strength of the cinemas of Asia and will help unite the industries and talents of this fast-growing region.

Ms.Jacqueline Tong and Mr.Sam Ho are representing Asian Film Awards Academy in 14th CIFF.

# Screening Schedule

**8th January 2017, Sunday**

Change in Schedule

<table>
<tr><th></th><th></th><th></th><th></th><th></th><th></th></tr>
<tr><td>Palazzo Screen 7</td><td>10.00 a.m.<br>21 Nights With Pattie<br>Dir.: Arnaud Larrieu, Jean-Marie Larrieu<br>France |2015 |115 -TTF</td><td>12.00 Noon<br>Nakom<br>Dir.: T.W. Pittman & Kelly Daniela Norris<br>Ghana |2016 |90 - WC</td><td>2.30 p.m.<br>Suntan<br>Dir.: Argyris Papadimitropoulos<br>Greece |2016 |104 - WC</td><td>4.40 p.m.<br>Bang Gang (A Modern Love Story)<br>Dir.: Eva Husson<br>France |2015 |98 - WC</td><td>7.00 p.m<br>Graduation |Bacalaureat<br>Dir.: Cristian Mungiu<br>Romania |2016 |128 - WC</td></tr>
<tr><td>Russian Cultural Centre</td><td>9.30 a.m.<br>Between Valleys |Entre Vales<br>Dir.: Philippe Barcinski<br>Brazil |2012 |80 – CFB</td><td>11.30 a.m.<br>Ishti<br>Dir.: G. Prabha<br>Sanskrit | 2016 | 108'|IP</td><td>2.00 p.m.<br>Postmaster<br>Dir.: Srijon Bardhan<br>Bengali | 2016 | 150'|IP</td><td>4.30 pm<br>Rubaai<br>Dir.: M. Anbazhagan<br>Tamil | 2016 | 119' – TFFC</td><td>7.00 pm<br>Dharmadurai<br>Dir.: Seenu Ramasamy<br>Tamil | 2016 | 147 – TFFC</td></tr>
<tr><td>RKV Film and Television Institute Auditorium</td><td>10.00 a.m.<br>A History Of Eternity | A Historia Da Eternidade<br>Dir.: Camilo Cavalcante<br>Brazil |2014 |121 - CFB</td><td>12.00 Noon<br>Irudhi Suttru<br>Dir: Sudha K Prasad<br>2015 | Tamil | 150'-SS</td><td>2.40 p.m.<br>The Teacher |Ucitelka<br>Dir.: Jan Hrebejk<br>Slovakia |2016 |102 -WC</td><td>4.30 p.m.<br>Blind Spot |Doudege Wenkel<br>Dir.: Christophe Wagner<br>Luxembourg |2012 |96 – CFL</td><td>7.15 p.m.<br>No Screening</td></tr>
<tr><td>Casino</td><td>10.00 a.m.<br>Glory |Slava<br>Dir.: Kristina Grozeva ,<br>Bulgaria |2016 |101</td><td>12.00 noon<br>The Golden Era | Huang Jin Shi Dai<br>Dir.: Ann Hui | Hongkong<br>2014 |178 – AFAA</td><td>3.15pm<br>Dogs |Caini<br>Dir.: Bogdan Mirica<br>Romania/Qatar |2016<br>104 -WC</td><td>5.00 pm<br>Loop |Hurok<br>Dir.: Isti Madarász<br>Hungary |2016 |95 -WC</td><td>7.00 pm<br>Load |La Carga<br>Dir.: Alan Jonsson Gavica<br>Mexico |2016 |94 -WC</td></tr>
<tr><td>Inox 2</td><td>10.15 a.m.<br>Coconut Hero |Coconut Hero<br>Dir.: Florian Cossen<br>Germany |2015 |101 -WC</td><td>12.15 p.m.<br>Destiny |Destiny<br>Dir.: Zhang Wei<br>China |2016 |97 -WC</td><td>2.30 p.m.<br>Dearest | Qin Ai De<br>Dir.: Peter Chan<br>Hongkong |2014<br>128 – AFAA</td><td>4.30 p.m<br>Slack Bay |Ma Loute<br>Dir.: Bruno Dumont<br>France / Germany |2016<br>122 -WC</td><td>7.15 p.m.<br>Parole |Parole<br>Dir.: Hossein Makham<br>Iran |2016 |92 - CFI</td></tr>
<tr><td>Inox 3</td><td>10.00 a.m.<br>Zazy |Zazy<br>Dir.: Matthias X. Oberg<br>Germany |2016 |99 -WC</td><td>12.00 Noon<br>Drought & Lie<br>Khoshksali Va Dorough<br>Dir.: Pedram Alizadeh<br>Iran |2016 |106 - CFI</td><td>2.15 p.m.<br>Ventoux |Ventoux<br>Dir.: Nicole van Kilsdonk<br>Netherlands |2015<br>104 -WC</td><td>4.30 p.m<br>A Creator with Midas Touch – Documentary on Panju Arunachalam<br>Dir.: G.Dhananjayan<br>2016 | Tamil | 93'-SS Presentation</td><td>7.00 p.m.<br>Death In Sarajevo<br>Smrt U Sarajevu<br>Dir.: Danis Tanović<br>Serbia |2016 |85 -WC</td></tr>
</table>

Country Focus Brazil: CFB | Country Focus Luxembourg: CFL | Country Focus Iran: CFI | Today's Talents from France: TTF
Asian Film Awards Academy: AFAA | New Talents from Germany: NTG | Martin Scorsese presents Masterpieces of Polish Cinema: MSCMPC Indian Panorama: IP | Tamil Feature Film Competition: TFFC | Special Screening – SS | World Cinema: WC

**Screening Schedule is subject to change**

## Death In Sarajevo



The 2016 Bosnian drama directed by Danis Tanović won the Silver Bear award at Berlinale 2016 film festival. It also happened to be the Bosnian entry for the Best Foreign Language Film at the 89th Academy Awards but uiltimately didn't win a nomination. At Berlin it won the Jury Grand Prix, as well as FIPRESCI prize for films shown in competition.

### Pic(k) of the Day

**Death In Sarajevo**
Dir.: Danis Tanović
Serbia | 2016 | 85 -WC
Inox 3 | 8th January 2017 | 7.00 p.m.

Thugs in the basement, politicos in the penthouse and an anarchist on the roof – Tanovic fills Hotel Europa checks in Bosnia-Herzegovina's history with death and disaster in this damning allegory, which has already received its share of appreciation from critics and movie-goers alike. If you are one with an obsession with thepast, the film has an interesting twist that will keep you to the edge of your seat. A one that shouldn't be missed, we say!

## FILM APPRECIATION
## (A brief swipe on the vast arena)

**MY TAKE........**

Film Appreciation is a subject on which, off and on, various classes, seminars and symposium are conducted by veterans in the field, the film makers and film enthusiasts. It assumes a great significance on the part of the film maker, the audience and the film critiques since film making, an 'Emperor' of all art forms which has of late become a mammoth enterprise involving huge manpower and money and can overnight make or mar the entrepreneur, a lot of responsibility and understanding are called for in their judgements to cater to the needs and expectations of film lovers, a hugely emerging and emancipated lot of late thanks to their exposure to World Cinema through the various media and methods of film viewing. An International Film Festival, for example, is one such avenue which these days attracts audience as varied as a connoisseur or commoner. Thus Film Appreciation has to be inculcated into the minds of the film lovers, in my view, as any other subject of study, so as not to rush to the 'off the sleeve' comments but to help evaluate judiciously and responsibly the intents and purpose with which a film maker attempts to present his creation in the form of a film.

I am not a film maker bur write this as a humble film lover exposed to view many and sometimes even some ordinary movies as a Film Society Enthusiast and it is an attempt to raise some pointers towards a vast subject viz. FILM APPRECIATION for which stalwarts in the field have made sterling contributions.



(V Srinivasan, M.A., B.Com., M.B.A.)
Jt. Sec., ICAF / Jt. Dir., CIFF)

# 'இறுதிச்சுற்று' - ஒரு பெருமித பாய்ச்சல்!

**ஆர்.கே.வி | பகல் 12.00 மணி**

இறுதிச்சுற்று... தமிழ் சினிமாவில் நான் கண்டு ரசித்த முதல் உருப்படியான 'ஸ்போர்ட்ஸ் டிராமா'. இதற்கு முன் அரிதாக நான் பார்த்த தமிழ் ஸ்போர்ட்ஸ் சினிமாவில், குறிப்பிட்ட விளையாட்டுகளைத் தாண்டிய ஆக்‌ஷன், ரொமான்ஸ் முதலானவற்றின் ஆதிக்கம் அதிகம் என்பதால் இப்படிச் சொல்கிறேன். 'வெண்ணிலா கபடிக்குழு' நல்ல படைப்பு என்றாலும், அதை விளையாட்டுக்குள் அடக்கிவிட முடியாது. அதில், காதல் உணர்வும் சமூகப் பார்வையும் நம் கவனத்தை அதிகம் ஈர்த்தது. இயக்குநர் சுதாவின் இறுதிச்சுற்று தன் தன்மையில் இருந்து விலகாதது தனிச் சிறப்பு.



சர்வதேச அரங்கில் நாட்டுக்குப் பெருமைத் தேடித் தரக்கூடிய திறமையாளர்கள் வறுமைச் சூழலிலும் வெகுவாக விரவிக்கிடக்கிறார்கள் என்ற நிஜத்தின் நிழல்தான் இறுதிச்சுற்று. அதேபோல், நம் விளையாட்டுத் துறையில் மறைந்துகிடக்கும் அரசியலும் வெகுவாக துகிலுரிக்கப்பட்டது. மாஸ் வரவேற்புக்காக திரைக்கதையில் இயன்றவரையில் சமரசம் செய்துகொள்ளாததன் மூலம் ப்யூர் சினிமாவை தர முயற்சி செய்ததும் குறிப்பிடத்தக்கது.

குத்துச் சண்டை வீராங்கனை மதி, அவரது பயிற்சியாளர் பிரபு (மாதவன்) இருவருமே இக்கதையின் ப்ரொட்டாகனிஸ்டுகள்தான். பிரபு கதாபாத்திரம் நேர்மையான முறையில் செதுக்கப்பட்டிருந்தது. ஹீரோயிஸம் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டதுடன், அதை நேர்த்தியாக மாதவன் களம் கண்டதும் தமிழ் சினிமா நாயகர்களின் சமகால வரலாற்றை நோக்கும்போது வியக்கத்தக்கதே.

காமத்தையும் அன்பையும் குழப்பிக்கொள்ளாத நடுத்தர வயது பிரபுவின் கதாபாத்திரம், தன் மாணவர்களின் வெற்றிகளில் உச்ச மகிழ்ச்சி அடைவதையே நோக்கமாக கொண்டு வாழும் நிஜ குருக்களின் பிரதிநிதியாகவே இருக்கிறார். குடிசைவாழ் பகுதியைச் சேர்ந்த திறமையான பெண்களில் ஒருத்திதான் மதி. தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் எந்த எல்லைக்கும் செல்லத் தயங்காத துணிச்சல்கார பெண்ணாகவும், சரியான இடத்தில் சரியான உணர்வுகளை வெளிப்படுத்தவும் மறைவுக்கவும் தெரிந்தவருமாக அமைக்கப்பட்டது கச்சிதம். தன் அக்காவுடனான உளவியல் பிரச்சினையை மதி அணுகும் விதமும் பக்குவம்.

மதியின் தந்தை கதாபாத்திரத்தையும் அதன் பின்னணியையும் கையாண்ட விதம் மட்டுமே நெருடலைத் தந்தது. நாசர், ஜாகீர் உசேன், ராதாரவி உள்ளிட்டோரின் உறுதுணை கதாபாத்திரங்கள் திரைக்கதைக்குத் தேவையான அளவிலும், கதையின் போக்குக்கு வலுசேர்க்கும் விதத்திலும் உருவாக்கியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழ் சினிமாவின் வர்த்தகத் திணிப்புகளை ரசிக்கக் கூடிய ரசிகர்களுக்கு சரிவிகிதத்தில் திரைக்கலையை கொண்டு சேர்த்தால், அவர்களின் ரசனையை வெகுவாக மேம்படுத்த முடியும் என்று ஜெயித்துக் காட்டிய சமீபத்திய தமிழ்ப் படங்களுள் இறுதிச்சுற்று முக்கியமானது.

'பெண்களுக்கு அதிகாரமளித்தல்' என்பது இப்போது அதிகம் பேசப்படுகிறது. அதை சினிமாவில் நிகழ்த்திக் காட்டியதற்கு உதாரணமாக இப்படத்தைக் குறிப்பிடலாம். 'இறுதிச்சுற்று' மதியிடம் தெளிவும், சுதந்திரமாக முடிவு எடுக்கும் மனப்பான்மையும் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை விரவியிருக்கும். பிரபு எனும் குரு, அவளுக்கு உறுதுணைபுரிபவரே தவிர, அவரை டிப்பெண்ட் செய்து இருக்க அவள் முற்படவில்லை. இதுதான் நிஜமான உமன் எம்பவர்மென்ட்!


சரா சுப்ரமணியம்

## இன்று என்ன படம் பார்க்கலாம்? - tamil.thehindu.com பரிந்துரைகள்

### COCONUT HERO

**ஐனாக்ஸ் 2 | காலை 10.15 மணி**



16 வயதான மைக் வாழவே பிடிக்காத இளைஞன். சாக வேண்டும் என முயற்சிக்கும் அவனுக்கு மூளையில் கட்டி இருக்கிறது என்றும், அது தன் உயிரையும் கொல்லும் என்றும் தெரியவருகிறது. ஒருவழியாக தான் நினைத்தது நடக்கப்போகிறது என சந்தோஷப்படும் மைக்கின் வாழ்க்கை, ஒரு பெண்ணை பார்த்து காதல் வயப்பட்டதும் அடியோடு மாறுகிறது.

### THE GOLDEN ERA

**கேஸினோ | பகல் 12.00 மணி**

ஒரு மனிதரின் வாழ்க்கைப் பற்றிய உண்மையைத் தெரிந்து எழுதும் வாழ்க்கை வரலாறு எழுத்தாளர் என்று தன்னை சொல்லிக்கொள்வதில்லை. மாறாக, ஒரு பலவகை சித்தரிப்புகளை படைக்கும் திறன்படைத்த கவி, ஸியோ ஹாங். அவர் தனது 31 வயதில் காசநோயினால் தாக்கப்பட்டு 1941ல் இறந்தார். நிலப்பிரபுத்துவ ஆட்சி முடிவுக்கு வந்ததிலிருந்து பசிபிக் போர்வரையுள்ள சீன வரலாற்றின் சமீபத்திய வரலாற்றுக் காலத்தில் மிகவும் கொந்தளிப்பான நேரங்களில் அனுபவம் மிக்கவர். ஹுய் வரையிலான பரந்துவிரிந்து வரலாற்றின்முன் டாங் வெய் ஒரு கவிஞராக ஒரு நுட்பமான அவரது உளவியல் ஓவியத்தை தீட்டுவதோடு தொடர்ந்து கலைஞனின் ஆன்மாவை வளர்த்தெடுக்கிறார். வரலாற்றின் சேதாரத்திலிருந்து தப்பித்து இந்த வரைக்குமாவது பாதுகாப்பாக உயிர்பிழைத்தேனே என்று எழுதிச் செல்லும் ஸியோ ஹாங் அமைதி, சமாதானம் ஆகியவை குறித்து எழுதி முடிக்கிறார்.



# தவறவிடாதீர்... கிராஜுவேஷன்- சிக்கல்மிகு களம்!

## பெலாஸோ | இரவு 7.00 மணி

குழந்தைகளுக்கு ஒழுக்க நெறிகளையும், எப்படியெல்லாம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுக்கும் பெற்றோர்களே அதிலிருந்து தவறினால் என்னவாகும்? நுட்பமான கதைக்களத்தை எடுத்துக்கொண்டு, அதனை மிக சுவாரசியமாக 'கிராஜுவேஷன்' திரைப்படத்தில் நமது பார்வைக்குத் தந்துள்ளார் கிறிஸ்டியன் முங்கியு.



ருமேனியாவின் வடமேற்கு பகுதியில் வசிக்கும் ரோமியோ, அப்பகுதியின் மிக முக்கியமான மருத்துவர். 18 வயதான அவரது மகள் எலிசா தனது பள்ளிப் படிப்பை அந்த ஆண்டோடு முடிக்க இருக்கிறாள். அதன்பின் பிரிட்டனைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் அவளுக்கு உதவித்தொகையுடன் படிப்பைத் தர தயாராக இருக்கின்றன. ஆனால், அவளது இறுதித் தேர்வின் போது எதிர்பாராதவிதமாக தாக்குதலுக்கு ஆளாகிறாள். அதன் பின் அவளால் சரியாக தேர்வு எழுத முடியவில்லை. அவளது மதிப்பெண்களை அதிகப்படுத்த பல்வேறு வழிகளை மேற்கொள்கிறார் ரோமியா. எலிசா பள்ளி படிப்பைப் முடித்து பெரிய பல்கலைக்கழகங்களுக்கு சென்றாளா? அவளைத் தாக்கியது யார்? என்ற கேள்விகளுக்கு பதில் சொல்லும் போக்கில் மேற்சொன்ன நுட்பமான விசயத்தை பேசுகிறார் இயக்குநர்.

மகளுக்கு அவ்வளவு ஒழுக்க நெறிகளை சொன்ன அப்பாவிடம் அதே ஒழுக்க நெறியைப் பற்றி கேட்டால் தனது தனிப்பட்ட விசயம் என்கிறார். அப்படியென்றால், மகளை வெளிநாட்டிற்கு அனுப்பி அப்படி என்ன படிக்க வைக்க போகிறார் என கேள்வி நம்மில் எழாமல் இல்லை. இந்த மாதிரியான சமூக சிக்கல்களை சுவராசியமான கதைக்களமாக மாற்றிய இயக்குநருக்கு பாராட்டுகள் சொல்ல வேண்டும். எந்த இடத்திலும் போரடிக்கவே இல்லை. நான் ஏற்கெனவே சொன்னது ஏகப்பட்ட கேள்விகளை நம்மிடையே தோன்ற வைப்பது இதன் சிறப்பு. அதேபோல அப்பா - மகள் இருவருக்கும் இடையேயான முரண்பாடுகளையும் அழகாக பேசியிருக்கிறது. சமூக சிக்கல்களை நுட்பமாக பேசியதில் 'கிராஜுவேஷன்' மிக சுவராசியமான திரை அனுபவம்.


முகில் தங்கம்

இத்திரைப்படம் 2016 கான்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றது.

## இன்று என்ன படம் பார்க்கலாம்? - tamil.thehindu.com பரிந்துரைகள்

### DOGS
கேஸினோ | பிற்பகல் 2.30 மணி



பச்சாரெஸ்ட் பகுதியில் இருந்து உக்ரைன் எல்லைப்பகுதிக்கு வந்துள்ள ரோமன் எனும் இளைஞன் அங்கு தாத்தா தனக்கு வழங்கிய நிலத்தை விற்க வருகிறான். ஆனால் அந்த நிலத்தை விற்க முடியாத சூழல் ஏற்படுகிறது. ஏற்கெனவே தாத்தா ஒரு உள்ளூர் குற்றவாளிகளின் தலைவனாக செயல்பட்டவர். இதனால் பாதிக்கப்பட்டவர் நிலத்தை விற்கவிடாமல் செய்யவே பிரச்சனையை இளைஞன் எப்படி எதிர்கொள்ளத் துணிகிறான். கடைசியில் முக்கோண வன்முறையொன்றில் மூன்றுபேர் பெரும் சண்டையில் சிக்குகிறார்கள். மிக மிக முக்கியமான படம்.

### LOOP
கேஸினோ | மாலை 4.40 மணி



ஆடம், கர்ப்பமாகியிருக்கும் தனது காதலியை, ஒரு விபத்தில் இழக்கிறான். ஆனால் அவளது மரணத்துக்குக் காரணமான சம்பவங்களை சரி செய்ய, ஆடமுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் இந்த வாய்ப்பு அவ்வளவு எளிமையானதல்ல. ஆடம் இதற்கு முன் எடுத்த முடிவுகளின் பின் விளைவுகளை கையாண்டு, தனது காதலியின் உயிரையும் காப்பாற்ற வேண்டும்.

### SLACK BAY
ஐனாக்ஸ் 2 | மாலை 4,30 மணி



1919-ன் கோடைக் காலம். சானல் கோஸ்ட் கடற்கரையில் பலர் மர்மமாக காணாமல் போகின்றனர். அதை விசாரிக்க மேச்சின், மால்ஃபாய் இருவரும் அங்கு வருகின்றனர். அங்கு ஸ்லாக் பே என்ற இடத்தில் தான் இந்த மர்மம் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்கின்றனர். அங்கு கரையில் வித்தியாசமான ஒரு மீனவ குடும்பமும், மலை மேல் இருக்கும் விடுதியில் ஒரு குடும்பமும் வசிக்கிறது. இரு குடும்பமும் சந்திக்கும்போது அவர்களின் அஸ்திவாரமே ஆடிப்போகிறது.